بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13/05/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

### ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு தொடர் - 18 அன்னாரது காலத்தில் ஏற்பட்ட முர்தத் ஆகும் குழப்பம் மற்றும் கிளர்ச்சியின் போது அனுப்பி வைக்கப்பட்ட போர்ப் படைகளைப் பற்றிய குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு எதிராக அனுப்பப்பட்ட போர்ப் படைகள் பற்றிய குறிப்பின் தொடர்ச்சியாக, ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் புத்தாஹ் எனும் இடத்திற்கு மாலிக் பின் நுவைராவை நோக்கி முன்சென்ற விபரங்களை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:*

மாலிக் பின் நுவைரா பனூ தமீம் கோத்திரத்தின் கிளைக் கோத்திரமான பனூ யர்பூஃ கோத்திரத்தைச் சேர்ந்தவன் ஆவான். அவன் ஹிஜ்ரீ 9 ஆம் ஆண்டு மதீனாவுக்கு வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அவனை அவனது கோத்திரத்தின் ஸகாத் வாங்கும் பொறுப்பில் நியமித்திருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன போது, அரபு நாட்டில் முர்தத் ஆகக்கூடிய மற்றும் கிளர்ச்சி செய்யக்கூடிய அலை எழுந்த போது, அவனும் முர்தத் ஆகக்கூடியவர்களில் ஒருவனாக ஆகிவிட்டான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன செய்தி அவனுக்குக் கிடைத்த போது, அவன் மகிழ்ச்சியில், சந்தோஷத்தில் கொண்டாடினான். மேலும், ‘ஸகாத்’ கடமை என்பதை ஏற்றுக் கொண்டு, அதை முஸ்லிம்களின் தலைமையகமான மதீனாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று கூறிவந்த, அவனது சமுதாயத்தின் முஸ்லிம்களை அவன் கொலை செய்த அதே வேளையில், பொய் நபித்துவ வாதமும் கிளர்ச்சியும் செய்த சஜாஹ் எனும் பெண்ணோடு சென்று சேர்ந்து கொண்டான். அவள் ஒரு பெரிய படையை அழைத்துக் கொண்டு, மதீனாவின் மீது தாக்குதல் தொடுக்க எண்ணிக் கொண்டிருந்தாள்.

ஜோதிடம் கூறும் கிருத்தவ பெண்ணான அரபு நாட்டு அறியினி, உம்மு சாதிர் சஜாஹ் பின்த் ஹாரிஸ் என்பவள் பனூ தமீம் எனும் கோத்திரத்தைச் சேரந்தவள் ஆவாள். அரபு நாட்டில் மக்கள் முர்தத் ஆவதற்கு சில காலங்கள் முன்பு அல்லது அந்த இடைப்பட்ட காலத்தில் வெளிப்பட்ட சில பொய் நபித்துவ வாதிகளாக இருந்த, கிளர்ச்சி செய்த தலைவர்களில் ஒருத்தியாக அவள் இருந்தாள்.

அவள் தன்னுடன் மாபெரும் படையை அழைத்துக் கொண்டு திடீரென்று பனூ தமீம் கோத்திரத்தை அடைந்து, நபித்துவ வாதம் புரிந்து, தன் மீது ஈமான் கொள்ளுமாறு அழைப்பு விடுக்கலாம் என்றும், இவ்வாறு அந்த முழுக் கோத்திரமும் அவள் மீது நம்பிக்கைக் கொண்டுவிடும் என்றும், உயய்னாவைப் போன்று பனூ தமீம்

கோத்திரத்து மக்களும் அவளைக் குறித்து, ‘யர்பூஃ கோத்திரத்து பெண் நபி, நவூதுபில்லாஹ்! குறைஷிகளின் நபியை விடச் சிறந்தவள்; ஏனெனில், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகிவிட்டார்கள். சஜாஹ் உயிரோடு இருக்கிறாள்’ என்று கூற ஆரம்பித்து விடுவார்கள் என்றும் நினைத்து, அந்த எண்ணத்தில் முன்னோக்கி வந்து கொண்டிருந்தாள்.

சஜாஹ் தனது கோத்திரத்தை உடன் அழைத்துக் கொண்டு யர்பூஃ கோத்திரத்தின் எல்லையை அடைந்து அங்கே தங்கிவிட்டாள். படைத்தளபதியான மாலிக் பின் நுவைராவை அழைத்து, சமரசம் செய்து கொள்வதற்கும் மதீனா மீது தாக்குதல் தொடுக்கும் நோக்கத்தில் தன்னுடன் செல்லுமாறும் அழைப்பு விடுத்தாள். மாலிக் சமரச அழைப்பையோ ஏற்றுக் கொண்டான். ஆனால், அவன் மதீனா மீது தாக்குதல் தொடுக்கும் எண்ணத்தைக் கைவிடுமாறு ஆலோசனை வழங்கினான். மேலும், மதீனா சென்றடைந்து அபூபக்ருடைய படைகளோடு போர் புரிவதை விட, முதலில் நமது கோத்திரத்தின் எதிரி படைகளை அடியோடு அழிப்பது சிறந்தது’ என்று கூறினான். மாலிக் உடைய இந்த ஆலோசனையை ஆமோதித்து சஜாஹ் யர்பூஃ கோத்திரத்தின் இதர தலைவர்களுக்கும் சமரச அழைப்பு விடுத்தாள். ஆனால், வகீயைத் தவிர, எவரும் இந்த அழைப்பை ஏற்கவில்லை. இதனால் அவள், மாலிக், வகீஃ மற்றும் தனது படையை உடன் அழைத்துக் கொண்டு மற்ற தலைவர்கள் மீது போர் தொடுத்துவிட்டாள்.

மும்முரமான போர் நடைபெற்றது. அதில், இருதரப்பிலும் பெரும்பான்மையினர் கொல்லப்பட்டனர். தோழமைக் கோத்திரத்து மக்கள் ஒருவர் மற்றவரை சிறைபிடித்து விட்டனர். சில காலங்களுக்குப் பிறகே, மாலிக் மற்றும் வகீஃ ஆகியோர் இந்த அழைப்பைப் பின்பற்றியது, தங்களது பெரிய தவறு என்பதை உணர்ந்தார்கள். ஆக, அவர்கள் மற்ற தலைவர்களுடன் சமரசம் செய்து கொண்டார்கள். ஒருவர் மற்றவருடைய கைதிகளைத் திருப்பி அனுப்பி விட்டனர்.

தனது தீய நோக்கங்களில் தோல்வியடைந்ததால் சஜாஹ் பனூ தமீமில் இருந்து மதீனாவை நோக்கி சென்றாள். அங்கு சென்றடைந்து அவ்ஸ் பின் குஸைமாவுடன் அவளுக்கு மோதல் ஏற்பட்டது. அதில் அவளுக்குத் தோல்வி கிடைத்தது. மதீனா மீது படையெடுக்கக் கூடாது என்ற விஷயத்திற்கு உறுதியாக எண்ணம் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், அவ்ஸ், சஜாஹ்வைத் திரும்பிச் செல்ல விட்டார்கள். சஜாஹ் உடைய படைத்தளபதிகள் மதீனா செல்வதற்கான வழி அடைபட்டிருப்பதைக் கண்டு கவலையடைந்தனர். அடுத்த படையெடுப்புப் பற்றி சஜாஹ்விடம் கேட்டார்கள். அதற்கு பதில் அளித்தவாறு, அவள் வஹீ வடிவில் எதுகை மோனையான வாக்கியத்தை அமைத்து, மதீனா செல்வதற்கான வழி தடைபட்டு விட்டது என்றாலும் கவலைபடுவதற்கு ஒன்றும் இல்லை என்று அவர்களுக்கு நம்பிக்கையூட்டினாள். மேலும், யமாமா செல்லுமாறு கட்டளையிட்டாள்.

சஜாஹ் தனது படையை அழைத்துக் கொண்டு யமாமா சென்றடைந்த போது, முஸைலமாவுக்கு அதிகம் கவலை ஏற்பட்டது. அவன் நினைத்தான்! ஒருவேளை அவன் சஜாஹ் உடைய படைகளோடு போர் புரிவதில் மூழ்கிவிட்டால், அவனது ஆற்றல் பலவீனமாகிவிடும். இஸ்லாமிய படை அவன் மீது தாக்குதல் தொடுத்து விடும். மேலும், அக்கம் பக்கத்து கோத்திரங்களும் அவனது ஆற்றலுக்குக் கட்டுப்பட மறுத்துவிடுவார்கள். இதை யோசித்த அவன், சஜாஹ்வுடன் சமரசம் செய்து கொள்ள உறுதியாக எண்ணம் கொண்டான். முதலில் அவளுக்கு அன்பளிப்புகளை அனுப்பினான். பிறகு தானே அவளை சந்திக்க விரும்பியதாகக் கூறி அனுப்பினான். அவள் முஸைலமாவுக்குத் தனது அவைக்கு வர அனுமதி கொடுத்துவிட்டாள். முஸைலமா பனூ ஹனீஃபாவின் நாற்பது பேரை உடன் அழைத்துக் கொண்டு சஜாஹ்விடம் வந்தான்.

தனிமையில் அவளோடு பேசினான். சஜாஹ்வை முழுமையாகத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொள்வதற்காகவும் தனது கூட்டாளி ஆக்குவதற்காகவும் அவன் இந்த ஆலோசனையை முன்வைத்தான்: 'நாம் இருவரும் நமது நுபுவ்வத்துகளை ஒன்றாக்கிக் கொள்ளலாம். பரஸ்பரம் திருமண உறவில் இணைந்து விடலாம்.' சஜாஹ் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டாள். மூன்று நாள்கள் அவனது முகாமில் தங்கிய பிறகு, இவள் தனது படைக்குத் திரும்பி வந்தாள். தனது கூட்டாளிகளிடம் தான் முஸைலமாவை உண்மையில் நிலை நிற்கக் கண்டதாகவும், எனவே, தான் அவனை மணந்து கொண்டதாகவும் கூறினாள்.

'மஹர் ஏதும் நிர்ணயிக்கப்பட்டதா?' என்று மக்கள் அவளிடம் கேட்டனர். அவள் கூறினாள்: மஹர் ஏதும் நிர்ணயிக்கவில்லை. அவர்கள், 'நீங்கள் திரும்பச் சென்று மஹர் நிர்ணயித்து விட்டு வாருங்கள். ஏனெனில், உங்களைப் போன்ற நபர் மஹர் இன்றி திருமணம் செய்வது அழகல்ல' என்று ஆலோசனை கூறினார்கள். ஆகவே, அவள் அவனிடம் திரும்பிச் சென்றாள். முஸைலமாவுக்கு தான் வந்த நோக்கத்தைத் தெரியப்படுத்தினாள். இதனால், முஸைலமா அவளுக்காக இஷா மற்றும் ஃபஜ்ர் தொழுகைகளில் எளிமையை ஏற்படுத்திவிட்டான். அதாவது, நிறுத்தி விட்டான். இதே போன்று, அவன் யமாமாவின் நிலங்களின் விளைச்சலின் பாதி வருமானத்தை சஜாஹ்வுக்கு அனுப்புவதாக முடிவானது.

இதற்குப் பிறகு, அவள் வழக்கப்படி பனூ தஃக்லபில் தங்கியிருந்தாள். தவ்பா செய்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாள். எதுவரை என்றால், ஹஸ்ரத் அமீர் முஆவியா அவர்கள் பஞ்சம் ஏற்பட்ட ஆண்டு அவளை அவளது சமுதாயத்தோடு சேர்த்து பனூ தமீமுக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு அவள் வஃபாத் வரை முஸ்லிம் ஆக இருக்கும் நிலையில் வாழ்ந்து வந்தாள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களுக்கு துலைஹா அல் அஸதியுடன் போர் முடிந்த பிறகு, மாலிக் பின் நுவைராவோடு போர் புரிய செல்லுமாறு ஆணையிட்டார்கள். அவன் புத்தாஹ் எனும் இடத்தில் தங்கியிருந்தான். காலித் அவர்கள் புத்தாஹ் வந்த போது அங்கு யாரையும் காணவில்லை. எனவே, அவர்கள் பல்வேறு படைக்குழுக்களை இங்கும் அங்கும் அனுப்பி வைத்தார்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் காலித் அவர்களுக்கு, 'செல்லும் இடங்களில் முதலில் இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுங்கள். எவர் இதற்கு பதில் அளிக்கவில்லையோ அவரைக் கைது செய்து அழைத்து வாருங்கள். எவர் எதிர்த்துப் போரிடுகிறாரோ அவரைக் கொன்று விடுங்கள்' என்று கட்டளையிட்டார்கள். அந்தப் படைக்குழுக்களில் ஒன்று மாலிக் பின் நுவைராவை சிறைபிடித்துக் கொண்டு வந்தது. அவனுடன் பனூ சஃலபா பின் யர்பூஃ கோத்திரத்தின் சில ஆண்களும் இருந்தனர்.

**மாலிக் பின் நுவைராவைப் பற்றி இரண்டு வகையான அறிவிப்புகள் கிடைப்பது குறித்த திறனாய்வு**

ஓர் அறிவிப்புபடி, அந்த இரவு கடுமையான குளிர் இருந்தது. குளிர் மேற்கொண்டு அதிகரிக்கலான போது, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்குமாறு கட்டளையிட்டார்கள்: اَدْفِئُوْا اَسْرَاكُمْ அதாவது, உங்களது கைதிகளுக்கு வெப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள். ஆனால், பனூ கனானவுடைய மொழிவழக்கில், இந்த சொல்லுக்கு, 'கொலை செய்யுங்கள்!' என்று பொருள். போர்வீரர்கள் இந்த சொல்லின் பொருளை உள்ளூர் மொழிவழக்குக்கு ஏற்ப புரிந்து, அவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டனர். ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களுக்கு கூச்சல் சத்தம் கேட்ட போது, அவர்கள் தமது கூடாரத்தில் இருந்து வெளியே

வந்தார்கள். ஆனால், அதற்குள் போர்வீரர்கள் அந்த அனைத்து கைதிகளையும் கொன்று குவித்து விட்டிருந்தார்கள். இப்போது என்ன செய்திருக்க முடியும்! அவர்கள், ‘அல்லாஹ் எந்த செயலை செய்ய விழைகிறானோ அது எந்நிலையிலும் நடந்தே தீருகிறது’ என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பு படி, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மாலிக் பின் நுவைராவைத் தம்மிடம் அழைத்தார்கள். சஜாஹ்வுக்குக் கைகொடுத்தது மற்றும் ஸகாத் கொடுக்க மறுத்தது சம்பந்தமாக அவனை எச்சரித்தார்கள். மேலும் அவனிடம், ‘ஸகாத் தொழுகையுடன் இணைந்த ஒன்று என்று உனக்குத் தெரியாதா?’ எனக் கேட்டார்கள். அவன், ‘உனது தோழர் இப்படித்தான் நினைத்தார்கள்’ என்று கூறினான். அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்று கூறுவதற்குப் பதிலாக தோழர் அல்லது கூட்டாளி என்று கூறினான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், அன்னார் எங்களுடைய தோழர் மட்டும்தானா? உங்களுடைய தோழர் இல்லையா?’ எனக் கேட்டார்கள். பிறகு, அவர்கள் அவனது தலையை சீவுமாறு ஹஸ்ரத் ஸிரார் (ரலி) அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள்.

வரலாறுகளின் அறிவிப்பு படி, இது தொடர்பாக ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் பேசினார்கள். இருவருக்கும் இடையில் விவாதம் ஏற்பட்டது. ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டவாறு படையை விட்டுவிட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மாலிக் பின் நுவைராவை, அவன் முஸ்லிமாக இருந்தும் கொல்லச் செய்து விட்டார்கள் என்று முறையிட்டார்கள். படைத்தலைவரான ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் அனுமதியின்றி படையை விட்டுவிட்டு மதீனா வந்த விஷயத்தில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அபூ கதாதா (ரலி) அவர்கள் மீது கடும் கோபம் கொண்டார்கள். மேலும், அவர்களுக்குத் திரும்பிச் செல்லுமாறு கட்டளையிட்டார்கள்.

தபரீ வரலாற்று நூலில் இதன் மேற்கொண்ட விபரம், இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், ‘ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒரு முஸ்லிமின் கொலைக்குப் பொறுப்பாளியாவார். இந்த விஷயம் நிரூபணம் ஆக முடியவில்லை என்றாலும் அவர்களைக் கைது செய்யும் அளவு விஷயம் நிரூபணமாகியுள்ளதே!’ என்று பணிவுடன் கூறினார்கள். எப்படியும் கண்டிப்பாக கொலை செய்யப்பட்டுள்ளது என்ற விஷயத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் அழுத்தம் கொடுத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது அதிகாரிகள் மற்றும் படைத்தளபதிகளை ஒருபோதும் கைது செய்வதில்லை.

எனவே, அன்னார் கூறினார்கள்: ‘உமரே! இந்த விஷயத்தில் மௌனம் காப்பீராக! காலித் பின் வலீத் முயன்று செய்த விஷயத்தில் தவறு ஏற்பட்டுள்து. நீர் அவரைப் பற்றி ஒருபோதும் எதுவும் கூறாதீர்.’ மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மாலிக்குக்கான ஈட்டுத் தொகையை செலுத்திவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கடிதம் எழுதி ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களை வருமாறு கூறினார்கள். அவர்கள் வந்து இந்த சம்பவத்தின் முழு விபரத்தைக் கூறினார்கள். மேலும், மன்னிப்பு கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களின் மன்னிப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

முஸ்லிம் விளக்கவுரையில், இமாம் நவவீ (ரஹி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மாலிக் பின் நுவைராவைப் பற்றி முழுமையாக விசாரித்தார்கள். பிறகு, ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் அவனைக் கொலை செய்ததாக சொல்லப்பட்ட பழியில் இருந்து நிரபராதி ஆவார்கள் என்ற முடிவுக்கு

வந்தார்கள். அன்னார் இந்த விஷயத்தில் விவகாரங்களின் உண்மையில், கலீஃபா என்ற முறையில், மற்றவர்களை விட அதிகம் அறிந்திருந்தார்கள்; ஆழமான பார்வை கொண்டிருந்தார்கள். அன்னாருடைய ஈமானும் எல்லாரைக் காட்டிலும் மேலோங்கி இருந்தது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை அணுகுவதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் குறித்து இந்த ஓர் ஆட்சேபனையும் செய்யப்படுகிறது. அதாவது, அவர்கள் போரின் போது, உம்மு தமீம் கோத்திரத்தின் கொலையுண்ட மனிதனின் மனைவியான லைலா பின்த் மின்ஹாலைத் திருமணம் செய்து கொண்டார்கள். மேலும், இத்தா காலம் முடிவடைவதற்காகக் கூடக் காத்திருக்கவில்லை. *ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த ஆட்சேபனைக்கு பதில் அளித்த வண்ணம், ஷாஹ் அப்துல் அஸீஸ் தெஹ்லவீ (ரஹ்) அவர்களின் கூற்றைச் சான்றாகக் கொண்டு கூறினார்கள்:* உண்மையில், இந்தக் கதையே கட்டுக் கதையாகும்.... மாலிக் பின் நுவைரா இந்தப் பெண்ணுக்கு நீண்ட காலமாக தலாக் கொடுத்து வைத்திருந்தான். அறிவீனத்தைப் பின்பற்றியவாறு அப்படியே அவளை வீட்டில் வைத்திருந்தான். இந்த அறிவீன சம்பிரதாயத்தை முறியடிப்பதற்காகவே திருக்குர்ஆனின் இந்த வசனம் இறங்கியது:

وَإِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ أَجَلَهُنَّ فَلَا تَعْضُلُوْهُنَّ

நீங்கள் பெண்களுக்கு மணவிலக்கு கொடுத்து விட்ட பிறகு, அவர்களின் இத்தா காலம் முடிவடைந்த பிறகு அவர்களைத் தடுத்து வைக்காதீர்கள். (அல் பகரா: 233)

எனவே, இந்தப் பெண்ணின் இத்தா காலமோ எப்போதோ முழுமையடைந்து விட்டிருந்தது. திருமணம் செய்வது அனுமதிக்கப்பட்டதாக ஆகிவிட்டிருந்தது. ஏனெனில், அவன் தலாக் கொடுத்து விட்டு தனது வீட்டில் மட்டும் வைத்திருந்தான்.

ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் பனூ ஹனீஃபாவை எதிர்த்துப் போரிடும் நோக்கத்தில் யமாமா பயணம் மேற்கொண்டது தொடர்பாக அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களுக்கு, அஸத் கோத்திரம், கத்ஃபான் கோத்திரம் மற்றும் மாலிக் பின் நுவைரா போன்றோருடன் போர் புரிந்து முடித்து விட்ட பிறகு, யமாமாவை நோக்கிச் செல்லுமாறு கட்டளையிட்டிருந்தார்கள். மேலும், இதை மிகவும் வலியுறுத்திக் கூறியிருந்தார்கள். *ஷரீக் (ரலி) பின் அபதா அவர்களின் அறிவிப்பைச் சான்றாகக் கொண்டு சுருக்கமான விளக்கத்தை எடுத்துரைத்த பின், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில் கூறினார்கள்:* யமாமா போர் பற்றிய விபரம் இனிவருங்காலங்களில் எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)